2003 மார்ச் 31]

மாநகராட்சியால் 2-4-2002-இல் இரயில்வே துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் இப்பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. து. நெப்போலியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 50 சதவிகித நிதி ஒதுக்கீடு செய்வதற்குத் தயாராக உள்ளது. ஒரு மேம்பாலத்திற்கு 8 கோடி ரூபாய் என்ற அளவில் இரண்டு மேம்பாலங்களுக்கும் 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். அதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய பங்கீடு 8 கோடி ரூபாய். அதை ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறது. C.M.D.A.விலிருந்து அந்தக் கடிதம் சென்று விட்டது. ஆனால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நெப்போலியன், தயாராக இருக்கிறது என்றால் அமைச்சருக்குத் தகவல் சொல்லச் சொல்லுங்கள், மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்கு.

திரு. து. நெப்போலியன்: மாநில அரசுதான் கேட்டுப்பெறவேண்டும். மாநில அரசு, கூடிய விரைவில் அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அது எப்போது நடைபெறும் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பாலப் பணியின் அவசர, அவசியத்தைக் கருதி, மத்திய இரயில்வே துறைக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. அங்கிருந்து ஒப்புதல் கிடைத்தவுடன் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 143, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

143—

நீதிமன்றக் கட்டடம்

•3630—திரு. நா. சந்திரமோகன்:

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 31

(அ) சீர்காழி நகரில் புதிய குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி நகரில் இயங்கிவரும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் கடந்த 20 ஆண்டுகளாக வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பழமையான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்தக் கட்டடத்தில் எழுத்தர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்குத் தனியே அறைகள்கூடக் கிடையாது. இதனால் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க முடியாமல் தேக்க நிலை உள்ளது. மேலும் வட்டாட்சியர் அலுவலகம் இயங்குவதற்குப் போதிய இடம் இல்லாமல் அவர்களும் சிரமப்படுகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் கட்டுவதற்குப் போதிய இடவசதி உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதியும், வழக்குகளை விரைந்து முடிக்கவும் ஒருங்கிணைந்த புதிய கட்டடத்திலே நடுவர் நீதிமன்றம் இந்த ஆண்டிலேயே கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அரசுக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. எந்த ஒரு நீதிமன்றம் கட்டப்பட வேண்டும் என்றாலும் அல்லது அமைக்கப்பட வேண்டுமென்றாலும் உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தைப் பெற்றுத்தான் அமைக்க முடியும்; கட்ட முடியும். எனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி உயர்நீதிமன்றத்தினுடைய கருத்துரு அனுப்பப்படவில்லை. எனவே அவசியத் தன்மை கருதி, மாண்புமிகு

2003 மார்ச் 31]

உறுப்பினருடைய கருத்து உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். உயர் நீதிமன்றத்திடம் கருத்துப் பெற்ற பிறகு, மத்திய அரசு நிதி உதவியை அளித்த பிறகு--வரும் ஆண்டிலே நிதி அளிப்பார்கள் என்ற நம்பிக்கை நிச்சயம் இருக்கின்ற சூழ்நிலையில்--அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *144*, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

144—

தங்கும் விடுதி

•20865—திரு. எஸ். மகாலிங்கம்:

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி அருள்மிகு லிங்கேஸ்வரர்-கருணாம்பிகை அம்மன், திருக்கோவிலில் தங்கும் விடுதி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், அவிநாசி அருள்மிகு அவிநாசி லிங்கேஸ்வரர் திருக்கோவில் சார்பாக பக்தர்கள் தங்கும் விடுதி கட்ட போதிய இடவசதியில்லாத காரணத்தால் திருக்கோவில் மூலம் தங்கும் விடுதி கட்டும் வாய்ப்புத் தற்சமயம் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை நோக்கி எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொண்டு, அவிநாசி அருள்மிகு லிங்கேஸ்வரர் கோயில் என்பது 'காசியிலே வாசி அவிநாசி' என்று

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY